
சம்பூரண மழையைப்
பெய்யப்பண்ணினீர்
You Sent Abundant Rain

Song 3 சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணினீர்

Psalm 68 – God sends abundant rain, refreshes weary land, provides for poor, scatters enemies, ascends on high, receives gifts. Echoes Exodus 14–15 (Red Sea), Joshua 3 (Jordan), Isaiah 55:10–11 (rain brings fruitfulness).

சம்பூரண மழையைப் பெய்யப்பண்ணினீர்
இளைத்துப்போன உம் சுதந்தரத்தைத் திடப்படுத்தினீர்
உம்முடைய மந்தைகளை அதில் தங்கக் செய்தீர்
உம்முடைய தயையினாலே ஏழைகளைப் பராமரிக்கிறீர்

அல்லேலூயா, அல்லேலூயா, உம் சம்பூரணம் பொழியும்
அல்லேலூயா, அல்லேலூயா, உம் ஜெயம் வரும்

ஆண்டவரே வசனத்தைத் தந்தீர் - அதைப்
பிரசித்தப்படுத்தும் கூட்டமோ மிகுதி
ஆதிமுதலாய் வானங்களின்மேல் எழுந்தருளினீர்
தேவனுடைய வல்லமையைப் பிரசித்தப் படுத்துவோம்

KJC-DNN

அல்லேலூயா, அல்லேலூயா, உம் சம்பூரணம் பொழியும்
அல்லேலூயா, அல்லேலூயா, உம் ஜெயம் வரும்

தேவரீர் உன்னதத்திற்கு ஏறினீர்
சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டுபோனீர்
மனுஷருக்குள் வாசம் பண்ணும் தெய்வமாம்
கர்த்தருடைய வல்லமையைப் பிரசித்தப் படுத்துவோம்

அல்லேலூயா, அல்லேலூயா, உம் சம்பூரணம் பொழியும்
அல்லேலூயா, அல்லேலூயா, உம் ஜெயம் வரும்

பரிசுத்தரே நீர் பயங்கரமாய் விளங்குகிறீர் - உம்
ஜனங்களுக்கு பெலனையும் சத்துவத்தையும் அருள்கிறீர்
இரட்சிப்பை தருகின்ற தேவனாம்
சுவாமியின் வல்லமையைப் பிரசித்தப்படுத்துவோம்

அல்லேலூயா, அல்லேலூயா, உம் சம்பூரணம் பொழியும்
அல்லேலூயா, அல்லேலூயா, உம் ஜெயம் வரும்

சர்வவல்லவரே ராஜாக்களைச் சிதறடித்தீர்
சேனைகளின் ராஜாக்களைத் தத்தளித்து ஓடச்செய்தீர்
தேவபர்வதம் பாசான் பர்வதம் போலானது.
உயர்ந்தவரின் வல்லமையைப் பிரசித்தப் படுத்துவோம்

அல்லேலூயா, அல்லேலூயா, உம் சம்பூரணம் பொழியும்
அல்லேலூயா, அல்லேலூயா, உம் ஜெயம் வரும்

கடவுளே உம்ஜனத்தின் முன்னே நடந்தீர்
பூமி அதிர்ந்தது வானமும் பொழிந்தது.
சீனாய் மலையும் உமக்கு முன்பாய் அசைந்துபோனது
சர்வசிருஷ்டிகரின் வல்லமையைப் பிரசித்தப்படுத்துவோம்

அல்லேலூயா, அல்லேலூயா, உம் சம்பூரணம் பொழியும்
அல்லேலூயா, அல்லேலூயா, உம் ஜெயம் வரும்

KJC DNN